1994 மே 3]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கிற அருங்காட்சியகத்திலே இருக்கிற சிலைகள் போன்றவற்றை எல்லாம் நல்ல முறையிலே பாதுகாக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இதைப்போலவே ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் இருக்கிற அருங்காட்சியகங்களில் எல்லா வசதிகளையும் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் அறிவுறுத்தி இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. சேலம் மாவட்ட அருங்காட்சியகத்திற்கும் இது போன்ற வசதிகள் செய்வதற்கு அரசு ஆராய்ந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல நூற்றாண்டுகளாகக் கிடைக்கப் பெற்ற அறிய பொக்கிஷங்கள், பொருள்கள் எல்லாம் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பில் உள்ளன. அவைகளைப் பெற்று அரசு அருங்காட்சியகத்தில் வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் அனைத்து வசதிகளும் அமைந்த நல்ல கட்டிடம் தேடப்பட்டு வருகிறது. அது கிடைத்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் இருக்கிற அந்தப் பொருள்களையும் அருங்காட்சியகத்திற்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 498, திரு. எம். ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை. திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

498—

மதுரை, கோவை, திருச்சி நகரங்களின் முக்கிய சாலைகளில் சுரங்கப் பாதை அமைத்தல்

*11187—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பார்ரா—

(அ) மதுரை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களில் பிரதான சாலைகளில் சென்னை நகரில் அமைக்கப்பட்டுள்ளது போல் சுரங்கப்பாதை அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மதுரை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களில் பிரதான சாலைகளில் சென்னை நகரில் அமைக்கப்பட்டுள்ளது போல் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரம் ஒரு வளர்ந்து வருகிற நகரமாக இருக்கிறது. மதுரையிலே போக்குவரத்து நெருக்கடி அதிகமாக இருக்கிறது. மதுரையிலே கோரிப்பாளையம் தேவர் சிலைக்கு அருகில் 4 சாலைகள் சந்திக்கின்றன. அந்த 4 சாலைகள் சந்திக்கும் இடத்திலே அடிக்கடி விபத்துக்கள், வாரத்திற்கு 4, 5 விபத்துக்கள் ஏற்படுகின்றன. அவற்றை எல்லாம் தவிர்க்கும்பொருட்டு, தேவர் சிலைப் பகுதியிலேயும், மதுரையிலே பேருந்து நிலையம் அருகே அரசரடிக்குப் பக்கத்திலுள்ள ப்ளை ஓவர் பகுதியிலேயும் சுரங்கப் பாதைகள் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்தைப் பொறுத்த வரையில் 4 தேசிய நெடுஞ்சாலைகள், 7 பிரதான மாவட்டச் சாலைகள், 2 மாவட்டச் சாலைகள் இருக்கின்றன. இந்தச் சாலைகளில் தேவர் சிலைக்குப் பக்கத்திலும், சிம்மக்கல் அருகிலும், கட்டபொம்மன் சிலைக்கு அருகிலும் மக்கள் நெருக்கடி அதிகமாக இருக்கின்ற காரணத்தால் மாநகராட்சி அந்தப் பகுதிகளிலே சுரங்கப் பாதை அமைக்கும் திட்டத்தை எடுத்துக் கொண்டு பரிசீலனை செய்கின்ற நிலையில், மாநகராட்சி யினுடைய நிலைமை சரியாக இல்லாத காரணத்தால் இன்றைக்கு நடவடிக்கை கைவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்திலே சுரங்கப் பாதை அமைப்பது பற்றி பல ஆண்டுக்காலமாக இந்த மன்றத்திலே கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. இருந்தாலும் நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் அது கைவிடப்பட்டது என்று சொன்னார்கள். இருந்தாலும், உலக வங்கி மூலமாக அந்தத் திட்டத்தை நிறை வேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

1994 மே 3]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலைமை காரணமாகத் தான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள 3 இடங்களில் பணிகள் தாமதப்பட்டிருக்கின்றன. இருந்தாலும்கூட .பெருகி வரும் மதுரை மாநகரின் தேவையைக் கருத்தில் .கொண்டு, அதற்கு உண்டான முழு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகரில் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கோவை காந்திபுரம், உக்கடம் ஆகிய பகுதிகளில் சுரங்கப் பாதை அமைப்பதற்காக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து கோவை நகரில் பெருகி வரும் மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு காந்திபுரம் பகுதியில் சுரங்கப் பாதை அமைக்க இந்த ஆண்டு உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11—05

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோவை மாநகராட்சியினுடைய காந்திபுரம், ஜெயில் ரோடு, டவுன் ஹால், பெரிய கடைவீதி மற்றும் சி. எம். சி. மருத்துவமனை முன்பு இருக்கிற திருச்சி சாலை ஆகிய இந்த 3 சாலைகளுமே மக்கள் நெருக்கடி அதிகமாக இருக்கின்ற சாலைகளாக கோவை மாநகராட்சியால் பிரிவு படுத்தப்பட்டுள்ளன. இந்த மூன்று சாலைகளும் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த சாலைகளாக இருப்பதால், மாநகராட்சியால் சுரங்கப்பாதைகள் அமைக்கின்ற பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை இருக்கிறது. அதைக் கருத்திலே கொண்டு நெடுஞ்சாலைத் துறையோடு இது சம்பந்தமாகப் பேசி ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், மிக முன்னேறி வருகிற, முன்னேறிவிட்ட மாவட்டம். அங்கே 25 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். மிகுந்த நெருக்கடி நிறைந்த பகுதி. புறநகர் பகுதிகளிலிருந்தும் அன்றாடம் வியாபாரிகளும் விவசாயிகளும் அங்கே வந்து செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. இதனால் நடந்து செல்பவர்களுக்கும் பேருந்துகளில் செல்பவர்களுக்கும் நெருக்கடி அதிகமாகி, ஒரு இடத்தைக் கடப்பதற்கு அரை மணி

நேரம் என்ற சூழ்நிலை இப்போது உருவாகியிருக்கிறது, ஆகவே அமைச்சர் அவர்கள், சுரங்கப்பாதைகளை அமைப்பதற்குண்டான நடவடிக்கைகளை எடுக்க, அதற்கு இந்த ஆண்டிலேயே முன்னுரிமை அளிக்க முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் பல்வேறு பணிகள் போர்க்கால அடிப்படையிலே அந்த மாநகராட்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை என்னுடைய மானியக் கோரிக்கையிலேயே எடுத்துரைத்திருந்தேன். கடந்த ஆண்டு மட்டும் 80 கோடி ரூபாய்க்கு மாநகராட்சியிலே மக்களுக்குத் தேவைப்படுகின்ற அத்தியாவசியப் பணிகள் அத்தனையும் தொடங்கப்பட்டு இன்றைக்கு அவைகள் முடிவு பெற்றிருக்கின்றன. இந்த ஆண்டு அரசு ஆய்வு மேற்கொண்ட அந்த 80 கோடி ரூபாய்த் திட்டங்கள் இன்றைக்கு நடப்பு ஆண்டான 1994-95-ல் ரூ. 120 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த 120 கோடி ரூபாயிலும் பல அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளைப் பார்த்துச் செய்கின்ற நிலையில்தான் இன்றைக்கு கோவை மாநகராட்சி இருந்து வருகிறது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற இந்தச் சுரங்கப் பாதைத் திட்டம் என்பது அதிகச் செலவினத்தை உருவாக்கக் கூடியது என்ற காரணத்தாலும் இப்போது குறிப்பிட்ட சாலைகள் நெடுஞ்சாலைத் துறையில் இருக்கின்ற காரணத்தாலும் எதிர்காலத்தில் இதுபோன்ற சாலைகளும் இதிலே இருந்தால்தான் அந்த நெருக்கடி நிலைமையை மாற்றியமைக்க முடியும் என்ற காரணத்தாலே உடனடியாக அவைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். நிதி நிலைமையைக் கருத்திலே கொண்டு இந்தப் பணிகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திருச்சிராப்பள்ளி நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்தியுள்ளார்கள். அதற்கு என்னுடைய இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சி, பாலக்கரை, பீமநகர், தென்னூர், ஜீவா நகர் போன்ற இடங்களில் மக்கள் நெருக்கடி அதிகமாக உள்ள அந்த இடங்களிலே எல்லாம் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டு, மணிக்கணக்கில் நிற்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் அந்தச் சுரங்கப்பாதை அமைக்கின்ற திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 மே 31

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகராட்சியைப் பொறுத்தவரையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிற பகுதியாக மத்தியப் பேருந்து நிலையப் பகுதியும், மெயின்கார்டு கேட் பகுதியும் காந்தி மார்க்கெட் பகுதியும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்தப் பகுதிகளில் போக்குவரத்து வசதிகள் அதிகமாக இருக்கிற நிலைமையைக் கருத்தில் கொண்டு அங்கு சுரங்கப் பாதை அமைக்க வேண்டுமென்று நகராட்சி ஆணையரும் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேயும் நிதி நிலை அடிப்படையிலேயும் இந்தத் திட்டங்கள் பரிசீலிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித் தேவர், இது சுரங்கப்பாதை பற்றிய கேள்வி. உங்கள் பகுதியில் சுரங்கப்பாதை தேவை இருப்பதாகத் தெரியவில்லை, மாநகராட்சி பகுதிக்குள்ளாக வருகிறது. சுரங்கப்பாதை அமைக்கின்ற அளவுக்கு அங்கே பகுதி இருக்கிறதா ?

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வது போன்று நிதி நிலைமை காரணமாக சுரங்கப்பாதை அமைப்பது இப்போதைக்கு முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நான் சொல்வது எல்லாம், கட்டபொம்மன் சிலை, தேவர் சிலை மற்றும் சிம்மக்கல் பகுதியிலே தற்காலிகமாக அங்கே நடைபாதையிலே இருக்கின்ற கடைகளையும் ஆக்கிரமிப்புகளையும் அகற்றினாலே அங்கே போக்குவரத்து ஓரளவுக்கு சீர்பட முடியும். அதையாவது அகற்றி அமைச்சர் அவர்கள் சுரங்கப்பாதை அமைப்பதற்கு முன்னால், தற்காலிகமாக இருக்கிற அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, நடைபாதைகளில், பிளாட்பாரங்களில் இருக்கின்ற கடைகளையும் அகற்றினாலே அந்த நெருக்கடி குறையும் என்று கருதுகிறேன். அதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்தைப் பொறுத்தவரை வரலாற்றிலே எந்தக் காலத்திலேயும் இல்லாத அளவுக்கு இன்றைக்கு, மாநகரம் முழுவதுமே ஆக்கிரமிப்புகளை அகற்றி வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் நேரடியாக இந்தப் பணிகள் எல்லாம் எப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் அறிந்து இருக்கிறார்கள். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டு இருக்கின்ற பகுதிகளிலே அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் எல்லாம் சமீப காலத்திலே அகற்

றப்பட்டு இருக்கின்றன. அப்படி ஏதாவது குறிப்பிட்ட இடத்திலே இருக்கும் என்று சொன்னால், உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. த. ரத்தினவேல்.

திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் திருச்சி மாநகரத்தில் காந்தி மார்க்கெட் பகுதியிலும் மத்திய பேருந்து நிலையம் அருகிலும் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் இந்த ஆண்டு இந்தத் திட்டம் துவக்கப்படவில்லை என்று சொன்னாலும், அடுத்த ஆண்டிலாவது அரசு நிறைவேற்றித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருச்சி மாநகரைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கின்ற இந்தத் திட்டங்கள் அவசியம் என்று சொல்லி, நிதி நிலையின் அடிப்படையிலே இந்தத் பணிகள் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்து இருந்தேன். இன்றைக்கு உள்ளாட்சி நிறுவனங்களுக்கு இருக்கின்ற பிரதானப் பிரச்சினையே, நிதி நிலைமை தான். இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு உள்ளாட்சி நிறுவனங்கள் தங்களுடையநிதி நிலையைப் பெருக்குவதற்கு எவ்வளவோ நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே வருகின்ற நிதி ஆண்டில் இது பற்றி ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 499, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

499—

வேலூரில் பேருந்து நிலையத்தைப் பழுதுபார்த்தல்

*20583—திரு. சி. ஞானசேகரன் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகரில் பேருந்து நிலையம் பழுதுபார்க்கப்படாமல் உள்ளதால், மூன்று இடங்களில் பேருந்துகள் வெளியில் நிறுத்தப்பட்டு பொதுமக்கள் பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?